அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI

Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண் :166/2016
தேதி.:3/11/2016

**மாண்புமிகு முதலைமைச்சர் அவர்களின்**
**சட்டபூர்வமான நடவடிக்கையால் சிறுவாணி ஆற்றின் குறுக்கே**
**அணை கட்ட தடை விதிக்கப்பட்டிருக்கிறது.**
**ச.ம.க நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் பாராட்டு.**

கேரளாவின் சிறுவாணி ஆற்றின் குறுக்கே அட்டப்பாடி பள்ளத்தாக்கில் அணை கட்ட மேற்கொண்ட நடவடிக்கைகளை நிறுத்திவைக்க கேரளா அரசுக்கு, மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த தடை உத்தரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்தாலும், அவர்கள் எடுத்த முயற்சியாலும்தான் என்பது பாராட்டுக்குரியதாகும்.

சிறுவாணி ஆற்றின் மூலம் தமிழகத்தின் கோயம்புத்தூர் நகரின் குடிநீர் தேவைகள் பூர்த்திசெய்யப்படுகிறது. அணை கட்டினால் தமிழகத்தின் மேற்கு மாவட்டங்கள் பாதிப்புக்குள்ளாகும்.

எனவே, காவிரி நதிநீர் பிரச்சனை மற்றும் வழக்குகள் முடியும்வரை இந்த அணை கட்டும் திட்டத்தை செயல்படுத்தக்கூடாது என்றும் இதுதொடர்பாக தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மத்திய அரசுக்கு பல கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளது.

ஆனால் சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு தடைவிதிக்க சில கட்சிகள் சட்டபூர்வமாக எதிர்கொள்ளாமல் மக்களையும், விவசாயிகளையும் சட்டத்திற்கு எதிராக தூண்டும் விதமாக போராட்டங்களை நடத்தியும், “கடிதம் மட்டும் எழுதுவதால் காரியம் நடந்துவிடுமா?” என்றும் கேள்வி எழுப்பியது.

ஆனால் அதனை முறியடிக்கும் வகையில் சட்டபூர்வமாக இந்த பிரச்சனையை எதிர்கொண்டு சிறுவாணி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தடை உத்தரவு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டபூர்வமாக போராடி எடுத்த முயற்சி என்பது பாராட்டுக்குரியதாகும்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும்அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்